செ.வெ.எண்: 320 நாள்:16.05.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழக அரசின் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு ஹஉருவாக்கும் திட்டத்தின் கீழ் (UYEGP) மான்யத்துடன் கூடிய தொழில் கடன் வசதி விண்ணப்பித்து பயன்பெற வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்ற சுய தொழில் செய்வதற்கான கடனுதவி திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, சேவை, வியாபாரத் தொழிலுக்கு முறையே அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம், ரூ.3.00 இலட்சம், ரூ.1.00 இலட்சம் வரை சுய தொழில் செய்ய வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கு குறைந்த பட்ச கல்வி தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். அதிகபட்ச வயது பொது பிரிவினருக்கு 35, சிறப்பு பிரிவினருக்கு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000-க்கு மிகாமல் இருத்தல் அவசியம். குடும்ப அட்டை நகல் அல்லது இருப்பிட சான்றிதழ் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் திருநெல்வேலி மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

மேலும் திட்ட மதிப்பீட்டில் பொது பிரிவினர் 10% மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மகளிர் / சிறுபான்மையினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்று திறனாளிகள்/ திருநங்கையர்கள் ஆகியோர்கள் 5% விளிம்பு தொகையாகவும் வங்கியில் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் மூலம் கடன் பெறுபவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் **25%** (அதிகபட்சம் ரூ. 1,25,000/– வரை) அரசு மானியமாக வழங்குகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் (2018-2019) 175 நபர்களுக்கு கடனுதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கென மான்யமாக ரூ.105 இலட்சம் நிதி ஒதுக்கீடு அரசினால் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி அவர்கள் தலைமையிலான தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்படும். கடன் தொகைக்கு வங்கியினர் ஒப்புதல் அளித்தவுடன், பயனாளிகளுக்கு உதவித்தொகையுடன் கூடிய தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியுள்ள நபர்கள் www.msmeonline.tn.gov.in/UYEGP என்ற இணையதள முகவரி வாயிலாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் திருநெல்வேலி அலுவலகத்தை (0462-2572162, 0462-2572384) என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ள வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி